# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், திண்டுக்கல்

முன்னிலை – திருமதி. வா. தீபா, M.L.,
தலைமை நீதித்துறை நடுவர், திண்டுக்கல்.

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் –ம் நாள் சனிக்.கிழமை
Cr.M.P.07/2025 in SC.No.60/2024

ராஜா, த/பெ. தெய்வம் ....... மனுதாரர் / எதிரி.

//எதிர்//

அரசுக்காக,
காவல் ஆய்வாளர்,
கன்னிவாடி காவல் நிலையம்,
திண்டுக்கல் மாவட்டம். எதிர் மனுதாரர் / குற்ற முறையீட்டாளர்.
குற்ற எண்.10/2005

இந்த மனுவானது 06.12.2025 ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் / எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. A.K. அழகர்சாமி அவர்களும், எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர் தரப்பில் திரு.சி. குமரேசன், கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்களும் முன்னிலையாகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்த நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

மனுதாரர் / குற்ற முறையீட்டாளர் தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரணை செய்யக் கோரி பிரிவு 243 Cr.P.C. (பிரிவு 266 of BNSS)–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. மனுவின் சுருக்கம் :–

மனுதாரர் தாக்கல் செய்த மனுவில், மேற்படி வழக்கில் விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. இந்த வழக்கின் விபத்து பதிவேட்டில் இறந்து நபரான புகழ்நாதன் என்பவரை

திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்த நேரம் 06.08.2023–ம் தேதி காலை 11.30 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது. அ.சா.1 மூலமாக பெறப்பட்டு பகல் 1.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கன்னிவாடி காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட Intimation இந்த வழக்கில் மறைக்கப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.14 சிவராஜா, சார்பு ஆய்வாளர் அவர்களை குறுக்கு விசாரணை செய்தபோது, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து எப்போது தகவல் வந்தது என்று சரியாக நினைவில் இல்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.15 செந்தில்குமார், காவல் ஆய்வாளர் அவர்கள் தனது குறுக்கு விசாரணையில், விபத்து பதிவேட்டை பதிவு செய்த மருத்தவரை நான் விசாரிக்கவில்லை என்றும், திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து காலை 11.35 மணிக்கு கன்னிவாடி காவல் நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது என்றும், அதனை நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்றால் சரியல்ல என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் விபத்து பதிவேட்டை பதிவு செய்த மருத்துவர் விசாரணை செய்தும், அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட Intimation–க்கான ஆவணத்தினை பார்வையிட்டால் மட்டும் தான் இந்த வழக்கின் உண்மைத் தன்மையை நிரூபிக்க இயலும். எனவே, விபத்து பதிவேட்டை பதிவு செய்த மருத்துவரை விசாரணை செய்வதற்கும், அவர் மூலமாக அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட Intimation–ஐ மனுதாரர் / எதிரி தரப்பில் சான்றாவணமாக குறியீடு செய்வதற்கும் அனுமதி கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>3. எதிர் மனுதாரர் / குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :–</u>**

இந்த வழக்கின் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது சட்டப்படியும், பொருண்மைகளின் படியும் நிலை நிற்கத்தக்கதல்ல. எனவே, மனுதாரர் / எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும். இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிந்த நிலையில், வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் / எதிரி தரப்பில் குறிப்பிட்டுள்ள விபத்து பதிவேடு பற்றி ஏற்கனவே எதிரி தரப்பில் அ.சா.ஆ.13 மற்றும் அ.சா.14 ஆவணங்கள் மூலம் விளக்கம் பெறப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கின் மருத்துவ சாட்சி ஏற்கனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.11 மருத்துவர் தவ்சிப் அகமது தனது நீதிமன்ற சாட்சியத்தின் போது, இவ்வழக்கில் இறந்து போனவர்" அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தால் இறந்திருக்க கூடும் என்றும், மேற்கூறிய காயங்கள் அனைத்தும் மழுங்கிய ஆயுதத்தால் அல்லது பலமான தாக்குதலால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று அ.சா.ஆ.11 பிரேத விசாரணை அறிக்கை மூலம் அனைத்து விவரங்களும் தெள்ளத் தெளிவாக கூறப்பட்டுள்ள நிலையில், விபத்து பதிவேட்டினை பதிவு செய்த மருத்துவரை விசாரிக்க வேண்டியது எந்தவித அவசியமும் இந்த வழக்கில் எழவில்லை என்பதை நன்கு அறிந்திருந்தும், எதிரி தரப்பில் வேண்டுமென்றே வழக்கினை காலம் கடத்துவதற்காகவும், மேலும் விபத்து பதிவேடு பற்றி எந்த ஒரு விளக்கமும் அரசு மருத்துவரிடம் எதிரி தரப்பில் கேட்கப்படாமல் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவினை அனுமதிக்கும் பட்சத்தில், அரசு வழக்கிற்கு ஈடில்லா இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதோடு இந்த வழக்கின் தன்மையை திசை திருப்ப வாய்ப்புள்ளது. எனவே, இந்த நீதிமன்றம் எந்தவித முகாந்திரமும்

இல்லாமல் மனுதாரர் / எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என பிரார்த்திக்கப்படுகிறது.

4. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால், மனு அனுமதிக்கத் தக்கதா? அல்லது இல்லையா? என்பதாகும்.

5. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தமது வாதுரையில், மேற்படி வழக்கில் விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், இந்த வழக்கின் விபத்து பதிவேட்டில் இறந்து நபரான புகழ்நாதன் என்பவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்த நேரம் 06.08.2023–ம் தேதி காலை 11.30 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது. அ.சா.1 மூலமாக பெறப்பட்டு பகல் 1.00 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த வழக்கில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.14 சிவராஜா, சார்பு ஆய்வாளர் அவர்களை குறுக்கு விசாரணை செய்தபோது, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து எப்போது தகவல் வந்தது என்று சரியாக நினைவில் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளதாகவும், அ.சா.15 செந்தில்குமார், காவல் ஆய்வாளர் அவர்கள் தனது குறுக்கு விசாரணையில், விபத்து பதிவேட்டை பதிவு செய்த மருத்துவரை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளதாகவும், மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இந்த வழக்கில் விபத்து பதிவேட்டை பதிவு செய்த மருத்துவர் விசாரணை செய்ய வேண்டும் என்றும், அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட Intimation–ஆவணத்தினை பார்வையிட்டால் மட்டும் தான் இந்த வழக்கின் உண்மைத் தன்மையை நிரூபிக்க இயலும் என்றும், எனவே, விபத்து பதிவேட்டை பதிவு செய்த மருத்துவரை விசாரணை செய்வதற்கும், அவர்

மூலமாக அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட Intimation–ஐ மனுதாரர் / எதிரி தரப்பில் சான்றாவணமாக குறியீடு செய்வதன் மூலம் வழக்கின் உண்மைத் தன்மையை கண்டறிய இயலும் என்றும் வாதிட்டார்.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தமது வாதத்தில், எதிரி தரப்பில் குறிப்பிட்டுள்ள விபத்து பதிவேடு பற்றி ஏற்கனவே அரசு தரப்பில் அ.சா.ஆ.13 மற்றும் அ.சா.14 ஆவணங்கள் மூலம் விளக்கம் பெறப்பட்டுள்ளதாகவும், இந்த வழக்கின் மருத்துவ சாட்சி ஏற்கனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும், அ.சா.11 மருத்துவர் தவ்சிப் அகமது தனது நீதிமன்ற சாட்சியத்தின் போது, இவ்வழக்கில் இறந்து போனவர் அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தால் இறந்திருக்க கூடும் என்றும், மேற்கூறிய காயங்கள் அனைத்தும் மழுங்கிய ஆயுதத்தால் அல்லது பலமான தாக்குதலால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் அ.சா.ஆ.11 பிரேத விசாரணை அறிக்கை மூலம் அனைத்து விவரங்களும் தெள்ளத் தெளிவாக கூறப்பட்டுள்ள நிலையில், விபத்து பதிவேட்டினை பதிவு செய்த மருத்துவரை விசாரிக்க வேண்டியது எந்தவித அவசியமும் இல்லை என்றும், மேலும், அவர் அனைத்து சாட்சிகளும் விசாரிக்கப்பட்டு, வழக்கு முடியும் தருவாயில் இருக்கையில், இந்த வழக்கினை காலம் கடத்தும் நோக்கத்தோடு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிட்டார்.

7. மேற்படி இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன, அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது போல், அ.சா.ஆ.11 பிரேத விசாரணை அறிக்கை, அ.சா.ஆ.13 இறந்து போன நபரின் உள்ளுறுப்புகளின் பரிசோதனை அறிக்கை மற்றும் அ.சா.ஆ.14 மருத்துவரின் கருத்துரை ஆகிய ஆவணங்கள் மூலம் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.11

மருத்துவரின் சாட்சியத்திலும் இறந்து போன நபர் மழுங்கிய ஆயுதத்தால் அல்லது பலமான தாக்குதலால் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று அரசு தரப்பில் கூறப்பட்டு இருந்தாலும், மனுதாரர் / எதிரி தரப்பில் வழக்கில் விபத்து பதிவேடு பதிவு செய்த மருத்துவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்தால் தான் இந்த வழக்கின் விபத்து பதிவேட்டில் இறந்த நபரான புகழ்நாதன் என்பவரை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்த நேரம் மற்றும் அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்ட Intimation–ஆவணம் ஆகியவற்றைப் பார்வையிட்டால் மட்டும் தான் இந்த வழக்கின் உண்மைத் தன்மையை நிரூபிக்க இயலும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது.

எனவே, இந்த வழக்கை பொறுத்த வரையில், மேலே விவாதிக்கப்பட்டபடி, இருதரப்பினருக்கும் தகுந்த வாய்ப்பு அளித்து, அதன் அடிப்படையில் விபத்து பதிவேட்டை பதிவு செய்த மருத்துவரை விசாரணை செய்து, அதன் அடிப்படையில் வழக்கினை முடிவு செய்வதே நீதியின் பால் சரியானதாக இருக்கும் என்றும், இயற்கையின் நீதிக்கு உட்பட்டதாக இருக்கும் என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே, மேலே விவாதிக்கப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில், மனுதாரர் / எதிரி தரப்பில் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவில்,

இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தெகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால்

பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2025–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

V DEEPA

Ex. P10
Digitally signed by V DEEPA
Date: 2025.12.06 13:06:42 +0530

தலைமை நீதித்துறை நடுவர்.
திண்டுக்கல்.

மனுதாரர் / எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை.

எதிர் மனுதாரர் / குற்ற முறையீட்டாளர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை.

V DEEPA

Ex. P10
Digitally signed by V DEEPA
Date: 2025.12.06 13:06:57 +0530

தலைமை நீதித்துறை நடுவர்.
திண்டுக்கல்.